ரிஜிஸ்டர் நெ. 1378 | போஸ்ட் பாக்ஸ் நெ. 346. | டெலிபோன்-நெ. 258

DRAVIDAN
திராவிடன்

நாடோறும் வெளிவருவது

ஆசிரியர் திரு. சனக சங்கர கண்ணப்பர்.

மலர்-13] சென்னை வெள்ளுவருடம் மார்கழி 17உ 1928ஞ் டிசம்பர் 31உ திங்கட்கிழமை [இதழ்-295

“குடின்”

மருந்தினால் உடலைக் காப்பாற்றுங்கள்.

ஸ்வாசகாச ரோகம், ஈளை இருமல் முதலிய தொண்டை வியாதிகளுக்கு ஆச்சரியகாமான மருந்து

கிடைக்கும் இடம்:—

அப்பா அண்ட் கம்பெனி,

இங்கிலீஷ் மருந்து வியாபாரிகள்,

(247) 286, சைனு பஜார் ரோட், சென்னை.

தேவை.

கும்பகோணம் தாலூக்கா போர்டு ஆண்கள், பெண்கள் பாடசாலைகளுக்காக போதனாமுறை பயின்ற தேறிய உபாத்தியாயர்களும், உபாத்தினிகளும் தேவை. 10-1-1929-க்கு மேல் அனுப்பப்படும் மனுக்கள் கவனிக்கப்படமாட்டா. சம்பள விகிதம் கீழ்க்கண்டவாறு:—

	உபாத்தியாயர்கள். ரூ.	உபாத்தினிகள். ரூ.
செகண்டரி கிரேடு	30. 1—A 35.	... ...
எலிமெண்டரி ஹையர் கிரேடு	20. ½—A 25.	25. 1—A 30.
எலிமெண்டரி லோயர் கிரேடு	15. ½—A 20.	20. 1—A 25

தஞ்சை தாலூக்கா போர்டு கச்சேரி. 20 டிசம்பர் 1928. | (13) த. வே. உமாமகேசுவரம், தலைவர்.

சித்த வைத்தியப் பிரசாரம்

திருவாரூர்

ஸ்ரீ ஷண்முகானந்த வைத்தியசாலையின்

சித்த மருந்துகள் கிடைக்குமிடங்கள்:-

1. மகா-ா-ா-ஸ்ரீ, நா. சி. ராம. சிங்காரம்பிள்ளை அவர்கள் கம்பெனி அம்பாங் ஸ்டிரீட், கோலாலம்பூர்.
2. மகா-ா-ா-ஸ்ரீ, டி. கே. சோமு ஆச்சாரியார் அவர்கள் முகல் ரோட்டு, ரெங்கூன்
3. ஜீ. கே. சுந்தரம், ஷண்முகானந்த வைத்தியசாலை திருவாரூர்.
4. சி. ச. முத்துவேல்பிள்ளை, மலையீஸ்வரன், வடசந்து, நாகப்பட்டணம்.

(324 சி)

இன்ப மார்க்கங்களை விளக்கும் புதிய

கொக்கோக வசனம்

[illegible] ஆபாசம் [illegible] சுகத்தை அறியும் [illegible] கொக்கோகத்தின்படி [illegible] எழுதப்பட்டுள்ளது. இதில் [illegible] ஆண்களுக்கும் பெண்களுக்கும் இது முக்கியமாக வேண்டிய நூல். [illegible] காதல், சாதி, சாதிப் பொருத்தம், [illegible] இன்பமுறை, இன்னவிரகம், [illegible] முக்கியமான விஷயங்களைப் படங்களுடன் விளக்கும் உண்மையான நூல். 280 பக்கங்கள் கொண்டது 1-க்கு விலை ரூ. 1—0—0.

[illegible] அண்ட் கம்பெனி, [illegible], சென்னை

(213)

10 நிமிஷத்தில் வாழைப்பழத்தை கெட்டிப்படுத்தக்கூடிய

அசல்

தாம்பர பஸ்பமும்
கெந்தக நெய்யும்

மூன்றே வேளையில் குணம் தெரியும். பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

எவ்வளவு நாள்பட்ட கொடிய ரோகமாயிருந்தபோதிலும் சரியே நமது தாம்பர பஸ்பத்தை கெந்தக நெய் அனுபானத்தில் 12 அல்லது 24 நாள் சாப்பிட்டால் போதுமானது.

குஷ்டம், குறை சொறி, தடிப்பு, திமிர், மதமதப்பு, செம்மேகப் பத்தை, கருமேகப் பத்தை, கருங் குஷ்டம், வெண் குஷ்டம், அரிப்பு, எரிச்சல், கிரந்தி, ஆறாத ரணங்கள், குழிப்புண், கண்டமாலை, மூலம், மூல முளை, பவுத்திரம், அரையாப்பு, கன்னப்புற்று, யோனிப்புற்று, சாவாங்கி, பிளவை, ஆனைக்கால், அண்டவாதம், குன்மம், பாண்டு, மகோதரம், வாய்வு, வயிற்றுவலி, குதக வாய்வு, குதகக்கட்டு, [illegible] வீட்டுக்கு விலக்காகாதிருத்தல், சூலை, மோனி, மோனிச்சிலை, வீக்கம், குத்தி, குடைச்சல், பக்ஷவாதம், சுளுக்கு வாதம், வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரிழிவுமேகம், க்ஷயம், ஜுரம், இருமல், மந்தாரகாசம், ஸ்வாசகாசம் முதலிய 8-வித காசங்களையும் இன்னும் அநேக ரோகங்களையும் அதி சீக்கிரம் குணப்படுத்துவதில் கை கண்ட அனுபவமுள்ளது.

தாம்பர பஸ்பமும் கெந்தக நெய்யும் சேர்த்து } 12-நாள் சாப்பிடக்கூடியது விலை ரூ. 12—8—0. 24-நாள் சாப்பிடக்கூடியது விலை ரூ. 25—0—0.

நற்சாக்ஷி:— கோவைம்பூர், கண்டங்காமா ரோட்டு, பஜனை மடம், ஸ்கூல் மாஸ்டர் S. [illegible] பிள்ளை 31—10—1928-ல் எழுதுவதை கவனியுங்கள்.

ஐயா, தாங்களனுப்பிய தாம்பர பஸ்பத்தை 12-நாள் என் மகனுக்குக் கொடுத்ததில் வீங்கியிருந்த விரல்கள் [illegible] விட்டது. செருப்புப் பட்டபோதிலும் தெரியாமல் சொரணையற்றிருந்த இடங்களில் சொரணையும் கை விரல்களில் கெட்டியும் உண்டாகிவிட்டது.

நமது விலாசம்:— டாக்டர் எஸ். டி. மாணிக்கம்,

ஆயக்குடி, கணக்கன்பட்டி, S. I. Ry.

குறிப்பு:—நம்மிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன. வெளியூர் வாசிகள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது ரூ. 5. அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

(312)

சென்னை கிண்டி

குதிரை பந்தயம்

1928—29

முதல் ஸ்பிரிங் மீட்டிங்

சனிக்கிழமை	டிசம்பர் ...	
செவ்வாய்க்கிழமை	ஜனவரி ...	1
(கவர்னர்ஸ் கப்)		
சனிக்கிழமை	ஜனவரி ...	5
சனிக்கிழமை ...	,, ...	12
சனிக்கிழமை ...	,, ...	19

(301 இ)

உடனே தேவை.

“மாருதி” என்ற தமிழ் வாரப் பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும் விளம்பரங்கள் சேர்க்கவும் சென்னை நகருக்கும், தமிழ் நாட்டிலுள்ள எல்லா முக்கிய நகரங்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை. [illegible] மாதம் 1-க்கு 30 வீதம் சம்பளம் கொடுக்கப்படும். விவரத்திற்கு 9-1-1929 தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பம் செய்து கொள்ளவும்.

“மாருதி” காரியாலயம்,

(12) தபால்பெட்டி 253, சென்னை.



திங்கள் என்றும் அறியாத இளமைப் பருவத்தை அடைய வேண்டுமானால் பழநி, சி. சாமி, எம். மகாவீரிய

தங்க பஸ்பம்

சாப்பிடுங்கள். தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர் பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

பச்சிலை மூலிகைகளினாலே தீர்த்தப்பட்டது. [illegible] அபார தாதுபுஷ்டியும், பலமும், பசியும், [illegible] உண்டாகும். இவ் வாழ்வில் அதி அற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர் கடுப்பு, நீரிழிவு, பவுத்திரம், மூலம், க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாக்ஷி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாதுபுஷ்டி உண்டாயிருக்கிறது. இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப்பெருமாள் சாமி கவிராயர் பொன்னாச்சி.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி,

நித்தியானந்தவைத்தியசாலை, பழநி. S. I.

தந்தி விலாசம்:—“மலையப்பசாமி” பழநி. ஏஜண்டுகள் தேவை.

(61 எ)

இந்தியா காங்கிரசு.

பண்டித நேருவின் பேருரை.

மதவெறியும் மௌடீகமும் ஒழிய வேண்டும். சீர்திருத்தங்கள்தாம் முக்கியம்.

43-ம் இந்திய காங்கிரசில் பண்டித மோதிலால் நேரு தலைமை வகித்துக் கீழ்க்கண்டவாறு சொற்பெருக்காற்றினார்:—

(சாராம்சம்)

நண்பர்களே! என்னை இரண்டாம் முறையும் இந்தக் காங்கிரசில் தலைமை வகிக்கும்படி தேர்ந்தெடுத்ததற்கு நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன். எனினும், எனக்குச் செய்த கௌரவத்தை நீங்களும் அளிப்பதற்குச் சற்றும் பின்வாங்குவீர்கள் என்பதற்கு ஐயமில்லை—அவ்வளவு சிரமமும் பொறுப்பும் வாய்ந்ததாயிருக்கிறது. நான் இதனை ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும், தாங்கள் ஒவ்வொருவரும் எனக்கு ஒத்தாசையளித்து என்மேல் முழு நம்பிக்கையும் இருக்கிறதென்று தேற்றியதினாலேயே, நான் இப்பெரிய தேசத்தின் விடுதலை உழைப்பின் தலைமை வகிக்கத் துணிவுகொண்டேன். என்னைத் தலைமை பூண்டெழுகத் தேற்றிய அன்பே, என் வார்த்தைகளை மதிக்கச் செய்து, அதன்படிக்கு ஒத்துழைக்கப் புரிவிக்கும் என்று நம்புகிறேன்.

நாம் செய்யவேண்டியதென்ன?

நாம் முதன் முதலில் செய்யவேண்டிய முக்கியமான வேலைகளைப்பற்றி நான் கூறப் போகிறேன். நீங்கள் என்னிடத்தில் அழகிய சொற்களாலமைந்த மனிதத்தகிய உன்னத நோக்கங்களை எதிர்பார்ப்பதிற் பயனில்லை. நான் உலகத்தை இருக்கிறபடி கண்டு அதற்கு வேண்டியவைகளைப் புரியும் நோக்கத்தையுடையவன். உலகம் எப்படி இருந்தால் நலமென்பதைப்பற்றி நான் பேச முன்வரவில்லை. ஆனால், உன்னத நோக்கங்களை நீங்கள் கொள்ளப்படாதென்றும் கூறவில்லை. உன்னத நோக்கங்களை மனதில் வைத்துக்கொண்டு அவைகளை [illegible] நிலைமைக்கு ஒப்ப அநுசரிக்கும்படிக்குத் தான் வற்புறுத்துகிறேன். [illegible]

பண்டித மோதிலால் நேரு.

(போட்டோ நியூஸ் ஏஜன்ஸி), சென்னை.

[illegible]

நேரு அறிக்கை.

[illegible]

சுய நிர்ணயத்தில் நம்பிக்கை.

[illegible]

பூரண சுயேச்சையின் லக்ஷ்யங்கள்.

[illegible]

நிர்மாண நடைமுறை.

[illegible]

நடை முறையில் மதநீதி.

[illegible]

சமுதாயக் கொடுமைகள்.

[illegible]

வெளி நாட்டிலுள்ள இந்தியர்

[illegible]

திரு. சென் குப்தாவின் பேச்சு.

சாஸ்திர அதிதிகள் தொலைய வேண்டும்.

[illegible]

காங்கிரஸ் தலைவரைப் பற்றிய அபிப்பிராயங்கள்.

[illegible]

முடிவுரை.

[illegible]

சக்கிரவர்த்தி தேக நிலை

புதிது மருந்து

நியுயார்க்கிலிருந்து மருந்து

லண்டன், டிசம் 28

[illegible]

நியுயார்க்கிலிருந்து மருந்து

லண்டன், டிச 29

இந்த காலத்தில் ரணங்களை ஆற்றுவதற்காக டாலின் மருந்து என்ற ஒரு மருந்து உபயோகிக்கப்பட்டது. அந்த மருந்து அரசருடைய ரோகத்துக்கு உபயோகப்படுமென்று தெரிந்து அமெரிக்கா பிட்ஸ்பர்க்கிலுள்ள கர்னகி ஸ்டீல் கம்பெனியைச் சார்ந்த டாக்டர் ஹெர்மன் அந்த மருந்து தயாரித்து "ஒலிம்பிக்" என்ற கப்பலில் இங்கிலாந்துக்கு அனுப்பினார்.

அந்தக் கப்பல் சௌத்தாம்ப்டனுக்கு வந்து சேர்ந்ததும், அரசருடைய தூதர் சென்று அந்த மருந்துகளை வாங்கிக் கொண்டு வந்தார். அந்த மருந்தினும் ஒருவித கிருமி உற்பத்தியாகி ரணங்களை விரைவில் ஆற்றுகிறதாம்.

ரத்தம் செலுத்த முயற்சி

அரசருடைய தேகத்தில் பிறருடைய ரத்தை செலுத்தலாமென்ற யோசனையைத் தெரிந்து பத்துப் பன்னிரண்டு பேர் தாங்கள் ரத்தம் கொடுக்க தயாராயிருப்பதாக தெரிவித்தார்கள்.

ஆனால் அப்படிப்பட்ட சிகிச்சைக்கென்று செஞ்சிலுவைச் சங்கத்தில் இருப்பவர்கள் தவிர மற்றவர்கள் தெரிந்தெடுக்கப்பட மாட்டார்களென்றும் செஞ்சிலுவைச் சங்க காரியதரிசி அறிவிக்கிறார்.

மெல்போர்னில் தீ

ஆகாசதந்தி நிலையத்துக்கு ஆபத்து

மெல்போர்ன் டிசம் 28

இங்கிடத்திய பயங்கர ஆகாச தந்தி நிலையம் தீயினால் ஆபத்தான நிலைமையிலிருக்கிறது. அதில் யந்திரங்கள் இருக்கிற அறையைப் பாதுகாப்பது முடியாதென்று தோன்றுகிறது.

இன்னும் பல்லாரை கடத்தல்.

பீஷாவர், டிசம், 30

இன்று இரண்டு விமானங்கள் காபூலிலிருந்து பல்லார் புரொபஸர் திரு. மூசாபரத் ஆப்ரகிம் ஆங்கில காட்டில் நாட்டிலிருக்கும் இராணுவ ஆபீசர்களின் குடும்பங்கள் உட்பட பல்லாரைக் கொண்டு வந்தன. நிலைமையில் மாறுதலில்லை.

[illegible]

திராவிடன்

சென்னை 1928 டிசம்பர் 31

நேருவின் சொற்பெருக்கு

பண்டிதர் மோத்திலால் நேரு கல்கத்தா காங்கிரஸின் தலைவராக நிகழ்த்திய சொற்பெருக்கின் சில பகுதிகளை பிறிதோரிடத்தில் வெளியிட்டிருக்கின்றோம். வேதாந்திகளும், சித்தாந்திகளும் வேதாந்தம் தான் பெரிது, சித்தாந்தம் தான் பெரிது என்று பயனற்ற வாய்ச் சண்டை போட்டுக்கொள்வதுபோல மோதிலால் நேரு தம் சொற்பெருக்கில் பிரிட்டிஷ் தொடர்பற்ற சுயேச்சை வேண்டுமா, அல்லது பிரிட்டிஷ் தொடர்புள்ள சுயராஜ்யம் வேண்டுமா என்று தம் வாயின் முறையில் வாதித்துப் பிரிட்டிஷ் தொடர்புள்ள சுயராஜ்யம் இடைத்தால் போதுமென்கின்றார். இதைத்தான் அவர் சொல்லுவாரென்று நாம் அறிவோம். தம்முடைய அறிக்கையில் அவர் இந்தியாவுக்கு வேண்டியது பிரிட்டிஷ் தொடர்புள்ள சுயராஜ்யம் என்றே சொல்லியிருக்கின்றார். அவ்வாறாக, அவர் காங்கிரஸ் அதை வற்புறுத்தாமல் இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம். [illegible] சுயேச்சை வேண்டுமா, தொடர்புள்ள சுயராஜ்யம் வேண்டுமா என்று வாதித்து இறுதியில் தொடர்புள்ள சுயராஜ்யம் வேண்டுமென்றே சொல்வதால், [illegible] மக்களுக்கு என்ன பயன்? [illegible]

[illegible] ஏமாற்றம்! என்ன ஏமாற்றம்!!

இந்தியாவில் பிறப்பால், சாதியால், மதத்தால் ஏற்பட்ட உயர்வு தாழ்வுகள், ஆண் பெண் என்ற உயர்வு தாழ்வுகள், தீண்டப்படுவோர், தீண்டப்படாதார் என்ற உயர்வு தாழ்வுகள் இருந்துகொண்டு மக்கள் முன்னேற்றத்தை நாசமாக்குகின்றன. இவைகளைப்பற்றிப் பண்டிதர் மோத்திலால் நேரு யாதும் சொல்கின்றாரல்லர். ஏதோ கடனுக்கு ஒப்பாரிவைத்து அழும் முறையில் இவ்வுயர்வு தாழ்வுகள் எல்லாம் ஒழியவேண்டுமென்று இரண்டு மூன்று சொற்களால் சொல்லிக் கடன் கழிக்கின்றாரன்றி, இவ்வுயர்வு தாழ்வுகளால் இந்தியா எப்படி நாசமாய்ப் போகின்றது, மக்கள் முன்னேற்றம் எப்படி தடைப்படுகின்றது, இவைகளை யெல்லாம் ஒழிப்பது எங்ஙனம் என்று விரிவுபடுத்திக் கூறியிருக்கின்றாரல்லர். தொடர்பற்ற சுயேச்சை வேண்டுமா? தொடர்புள்ள சுயராஜ்யம் வேண்டுமா என்பதை வாதிப்பதற்குச் செலவிட்ட பக்கங்களையும், பேசிய பேச்சுக்களையும், அப்பேச்சுகளுக்காக எடுத்துக்கொண்ட நேரத்தையும், நாம் மேலே கூறிய உயர்வு தாழ்வுகளை ஒழிப்பதின் அவசியத்தை எடுத்துரைக்கச் செலவிட்டிருப்பாராயின் நாம் பண்டிதர் நேருவை இந்தியாவின் உண்மை நண்பர், பெருந் தேசபக்தர் என்று சொல்லியிருப்போம். ஆகவே, பண்டிதர் நேருவின் சொற்பெருக்கு வெறும் வக்கீல் பேச்சன்றி இந்தியாவின் விடுதலைக்குக் கடுகளவாவது பயன் அளிப்பதல்ல என்று நாம் உறுதியாய்க் கூறுவோம்.

சர்வகட்சி மகாநாட்டின் கதி

கல்கத்தாவில் கூடிய சர்வகட்சி மகாநாடு ஆண்டிகள் மடம் கட்டிய கதையாகத்தான் முடியும் என்று நாம் சில நாட்களுக்கு முன்பு எழுதியிருந்தோம். அஃது இப்பொழுது உண்மையாய் முடிகின்றது. ஏனெனின் ஒவ்வொரு கட்சியாரும் இப்பொழுது சர்வகட்சி மகாநாட்டை விட்டு விலகுகின்றார்கள். சர்வகட்சி மகாநாடு வருணாச்சிரம இந்து மகாசபை மகாநாடாக இருந்தால், அம்மகாநாட்டில் சுயமரியாதையுள்ளவர்கள் எவர்தான் கலந்து இருக்கமுடியும்? கல்கத்தா சர்வகட்சி மகாநாடு வருணாச்சிரமிகள் மகாநாடு. அது மகம்மதியர்கள் உரிமைகளையும், சீக்கியர்கள் உரிமைகளையும் தாழ்ந்த வகுப்பார் உரிமைகளையும், பார்ப்பனரல்லாதார் உரிமைகளையும் கொல்வதற்கென்று கூட்டப்படுகிறதென்பதை உணர்ந்தே மேற்கூறிய வகுப்பார்களில் சுயமரியாதையுள்ளவர்கள் எவருமே போகவில்லை. ஒரு சிலர் போனார்கள். ஆனால், போனவர்கள் இப்பொழுது அறிவு வந்து வெளியேறிவிட்டார்கள். திரு. ஜின்னா ஏதோ மகமதியர்கள் உரிமைகளைப் போராடிப் பெற்று விடுவதுபோல் செருக்கு கொண்டு சர்வகட்சி மகாநாட்டுக்குச் சென்றார். மகமதியர்கட்குச் சட்டசபைகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்தும் வேண்டுமென்று வாதாடினார். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இந்தியாவுக்குமட்டும் புதிதல்ல, அது பொறுப்புள்ள ஆட்சியுள்ள கானடாவில் இருக்கின்றது எகிப்தில் இருக்கின்றதென்றார். என்ன சொல்லியும் திரு. ஜின்னா அவர்கள் போர் பலிக்கவில்லை. சர்வகட்சி மகாநாடு ஒரே அடியாய் மகமதியர்கட்கு சட்டசபைகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கமுடியாதென்று சொல்லிவிட்டது. ஆகவே, ஜின்னா அவர்கள் கரிபூசிய முகத்துடன் வந்தவழியே திரும்பிவிட்டார்.

இனிச் சீக்கியர்கள் தமக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படல் வேண்டும் என்றனர். சீக்கியர்கள் சிறுபான்மையான வகுப்பினர். அவ்வாறிருந்தும் அவர்கட்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்க சர்வகட்சி மகாநாட்டார் மறுத்து விட்டார்கள். ஆகவே சீக்கியப்பிரதிநிதிகள் இக்கொடுமையைப் பொறுக்கமாட்டாது வெளியேறி விட்டார்கள். எனவே நாம் கல்கத்தா சர்வகட்சி மகாநாடு ஆண்டிகள் மடம் என்று சொல்வதில் என்ன குற்றம் இருக்கின்றது?

ஒரு வகுப்பாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லை என்றும் அல்லது உண்டு என்றும் முடிவு செய்யவேண்டியவர்கள் பிரிட்டிஷ் பார்லிமெண்டார். இந்த சர்வகட்சி மகாநாட்டார் வெறும் ஆண்டிகள். இந்த ஆண்டிகளுக்கு வெறும் சொல்லளவில் கூட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொள்ள மனம் இல்லை என்றால் இந்த ஆண்டிகள் கையில் சுயராஜ்யம் வந்துவிட்டால் மகமதியர்களையும், சீக்கியர்களையும், பார்ப்பனரல்லாதார்களையும் நசுக்கிவிட மாட்டார்களா? ஆகையினாற்றான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற போராட்டம் இருக்கின்றதென்பது பிரிட்டிஷ் மக்களுக்குத் தெரியக் கூடாதென்று சூழ்ச்சி செய்வதற்காக சைமன் கமிஷனைப் பகிஷ்காரம் செய்யவேண்டும், பகிஷ்காரம்செய்யவேண்டும் என்று இச்சர்வகட்சி மகாநாட்டாரும், அவர்கள் தம்பிகளாய காங்கிரசாரும் சொல்லுகின்றார்கள் இதை உணர்ந்தே நாம் சைமன் கமிஷன் பகிஷ்காரம் பார்ப்பனர்கள் சூழ்ச்சி என்கின்றோம்.

அகிலகட்சிமகாநாட்டு அலங்கோலம்.

சீக்கிய பிரதிநிதிகள் வெளியேற்றம்.

டாக்டர். அன்சாரியின் பரிதாப வேண்டுகோள்

சீக்கிய சங்க அறிக்கை.

கல்கத்தா, டிசம்பர், 30

இன்று அகில கட்சி மகாநாடு திரும்பவும் கூடிற்று. பிரதிநிதிகள் செற்பமாக வே வந்திருந்தனர். டாக்டர் அன்சாரி அவ் விஷயமாய் பேசுகையில் பிரதிநிதிகளின் தொகை இன்னும் இப்படியே குறைந்து போய் மகாநாட்டை ஓர் வேடிக் கூத்தாக மாற்றிவிடாதபடி மகாநாட்டு வேலைகளை துரிதமாய் முடித்து விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

சீக்கியர் அறிக்கை

மத்திய சீக்கிய சங்கத்தின் போரன் சர்தார் மேட்டாப்சிங் பின் வருமாறு ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வந்தார். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப்பற்றிக் கூறியிருக்கிறபடி இந்தியாவின் வருங்கால அரசாங்கத்திட்டத்தில் எவ்வித மான வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்கும் நேராகவோ அல்லது சுற்று வட்டாகவோ சிறிதும் இடங்கொடுக்கக் கூடாதென்றும் இதற்ிணங்க நேரு கமிட்டி அறிக்கையை திருத்த வேண்டுமென்று சர்தார் மேட்டாப் சிங் பிரேரேபித்தார்.

டாக்டர் அன்சாரி சர். சிவசுவாமி ஐயர்; திரு. விஜயராகவாச்சாரி முதலியோருடன் கலந்து கொண்டு இந்தப் பிரேரணையை ஒப்புக்கொள்ள முடியாதென்று நிராகரித்துவிட்டார்.

அதன் பின் மத்தியசீக்கிய சங்கத்தாரின் காரியதரிசியாகிய சர்தார் ஹர்னம் சிங் அந்த சங்கத்தாரின் அபிப்பிராயத்தைப்பற்றி ஓர் அறிக்கை வாசித்தார். அந்த அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. சிறுபான்மை கட்சியாருக்கு தக்க பாதுகாப்பு அளிப்பதே நல்ல நியாயம் திட்டத்தின் அடையாளமென்று திரு. ஜின்னா கூறினர். இந்த நல்ல ஆலோசனை சீக்கியர் விஷயத்தில் அனுசரிக்கப் படவில்லை. பஞ்சாப் ஜனத்தொகையிலே சீக்கியர் நூற்றுக்கு 11 பேர் வீதமாகும் அவர்கள் மொத்த வரியில் நூற்றுக்கு 40 வீதம் வரி செலுத்துகிறார்கள் சமீபகாலத்திலே தேசிய சுதந்திரத்துக்காக சீக்கியர் தங்களைப்பாகத் தக்கு இருபது பங்கு அதிகமான கஷ்ட நஷ்டங்களை அடைந்திருக்கிறார்கள் அப்படியிருக்க, நேரு திட்டத்தின்படி சீக்கியர்களுக்கு நூற்றுக்கு இரண்டு வீதம் பிரதிநிதித்துவம் கிடைக்குமோ என்பதுகூட சந்தேகம். வகுப்பு வாத உணர்ச்சியை ஆதாரமாகக் கொண்டே நேருதிட்டம் முழுவதும் எழுதப்பட்டிருப்பதைக் கண்டு சீக்கியர் மனம் வருந்துகின்றனர்.

வகுப்புவாரி சண்டை சச்சரவுகளுக்கு இந்த நேரு திட்டம் காரணமாயிருக்குமென்று சீக்கியர் அஞ்சுகின்றனர்.

காங்கிரஸ் முஸ்லிம் லீக் லட்சுமணபுரி ஒப்பந்தத்திலும் சீக்கியர் உரிமைகளின் மீது போட்டு அழுக்கப்பட்டுவிட்டன வென்பது எல்லோரும் அறிந்த தே. நேரு கமிட்டி திட்டத்திலும் நாட்டிலே இரண்டு பெரிய வகுப்பார் தங்களுக்குள்ளே அதிகாரத்தைப் பங்குபோட்டுக்கொள்ளுவதற்கும், வகுப்பு வாதங்களுக்கும் இடமுண்டாகுமே தவிர வேறில்லை. ஆகையால் பொது சேர்தல் தொகுதி ஏற்பட்டால் சீக்கியருக்கு பஞ்சாப் சட்டசபையில், நூற்றுக்கு முப்பது வீதம் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட வேண்டும். அப்படியே இந்திய சட்டசபையிலும் பஞ்சாப் பிரதிநிதிகளில் மூன்றிலொரு பாகம் சீக்கியருக்கு ஒதுக்கிவைக்கவேண்டும். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் சீக்கியர் சிறுபான்மையாயிருப்பதால் தக்க பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக சீக்கிய மத்திய சங்கத்தார் நேரு திட்டத்தை ஆதரிக்கிறதில்லையென்றும், அதனால் அகில கட்சி மகாநாட்டில் இனிமேல் கலந்துகொள்ள விரும்பவில்லையென்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றனர். இந்த அறிக்கையை மகாநாட்டு நடவடிக்கைகளில் குறிப்பிட வேண்டும் என்று கூறினர். அதன் பிறகு சீக்கிய சங்க பிரதிநிதிகள் "சத் ஸ்ரீ அகால்" என்ற கோஷத்துடன் அகிலகட்சி மகாநாட்டிலிருந்து வெளியேறிச்சென்றனர்.

நாமதாரி சீக்கியர் ஆதரிக்கிறார்களாம்!

நாமதாரி சீக்கியர்போரால் சர்தார் குருதயாள்சிங் நேரு அறிக்கையை ஆதரித்துப் பேசினர்.

திரு கு. நரிமன், மௌலானா ஜாபர் அலி முதலியோர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஆட்சேபித்துப் பேசியிருக்கின்றனர்.

மிஸஸ் பெசன்ட் பேசுகையில் அகில கட்சி மகாநாடு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை கண்டிக்க வேண்டுமென்றும் நேரு திட்டத்தை திருத்தும்படி மேற்படி கமிட்டிக்கு திருப்பி அனுப்ப வேண்டுமென்றும் கூறினர்.

பண்டிதர் மோட்டிலால் பேச்சு

பண்டிதர் மோட்டிலால் நேரு இவ் விஷயமாய்ப் பேசுகையில் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒப்பந்தம் செய்து கொண்டு நேரு திட்டம் தயாரிக்கப்பட்டது அதில் சீக்கியர் சேரவில்லை. ஆகையால் இப்போது அவ்விருதிறத்தாருடைய சம்மதமின்றி அத்திட்டத்தை மாற்ற முடியாது என்று கூறினர்.

முஸ்லிம்கள், சீக்கியர், இந்தியர், இந்துக்கள் ஆகிய நாலு வகுப்பாருக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கவேண்டுமென்று திரு. பில்லாலும், வடமேற்கு மாகாணத்தில் சீக்கியருக்கு ஸ்தானம் ஒதுக்க வேண்டுமென்று திரு. கே. எல். ரலியாராமும் கொண்டுவந்த திருத்தப்பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டன.

மசோலினி குமாரி.

இந்தியா வருகை.

திருவனந்தபுரம், டிசம், 29.

இத்தலி பிரதம மந்திரியின் குமாரி ஸ்ரீமதி மசோலினி இத்தலி, சிலோன், கான்சல் சிக்னர் ஸ்கிரப்பாவுடனும், மெய்காப்பாளருடனும், சகாக்களுடனும் இன்று காலை வருகின்றார். அவர்களை அழைத்து வர சமஸ்தானம் மருமாக்கு சமஸ்தான மோட்டார்களை அனுப்பியுள்ளது. வரவேற்கசமஸ்தானம் பெரும் ஏற்பாடு செய்துள்ளது அவர்கள் இங்கு இரண்டுநாள் தங்கி இரண்டு நாளும் அரசாங்க விருந்தினர்களாய் இருப்பர். அவர்கள் குற்றாலத்தில் தங்கவும் சமஸ்தானம் ஏற்பாடு செய்துள்ளன. அவர்களை வரவேற்பதற்காக திவான் தாம் கொச்சி போகும் பிரயாணத்தைத் தள்ளிவைத்திருக்கிறார்.

செயின்ட் கிர்ணாலிக்கும் அவர் மனைவியும் இன்று கொழும்பிற்கும் புறப்பட்டுச் சென்றனர்.

மசோலினி குமாரியின் மதுரை விஜயம்

மதுரையில் வரவேற்பு.

மதுரை, டிசம், 30

இத்தலி கடற்படை கட்டுத்தார் நாற்று இருபதின்மர் சிலோன் பாசிட்டியிய தலைமையின் கீழ் நேற்று பிற்பகல் 2-45 மணிக்கு ராமேஸ்வரத்திலிருந்து ஸ்பெஷல் டிரெயினில் வந்துசேர்ந்தனர். அதில் இருபதின்மரும் இருக்கின்றனர். சிலர் மசோலினியின் குமாரியுமிருக்கின்றனர். இவர்கள் பாம்பனில் மூன்று நாள் தங்கியிருந்தனர். ரயில் வந்ததும் அவர்களை மதுரை கலெக்டர் திரு. காப்பாஸ், ஜில்லாபோலிஸ் சூப்பரின்டெண்டு திரு. பி. எச். காட்ஸ்டன், அடிசனல் ஜில்லா மாஜிஸ்டிரேட் ஹார்டின், மதுரை முனிசிபல் சேர்மன் திரு. ஆர். எஸ். நாயுடு. திரு. கே. ஆர். வெங்கடராம ஐயர் எம். எல் ஸி. முதலியோர் வரவேற்றனர். எல்லோரையும் அறிமுகம் செய்துவைத்த பின்பு அவர்கள் மோட்டாரின் மீனாட்சியம்மன் ஆலயத்திற்குச்சென்றனர் அங்கு அவர்கட்கு எல்லா சித்திர வேலைப்பாடுகளையும் கலைகளையும் காட்டப்பட்டது அங்கிருந்து திருமலை நாயக்கர் மாலுக்குச் சென்றனர். இங்கு கலெக்டரின் அழைப்பின்பேரில் ரான் சாஹிப் மாணிக்கவாசகம்பிள்ளையும் அவருடைய மனைவியாரும், திரு. பி. பி. அரைக்கண்ணு முதலியாரும், அவருடைய மனைவியும் அவர்களை சந்தித்தனர். இங்கு ஸ்ரீமதி கெலின்னு, திருமதி பொன்னம்மாள், சௌராஷ்டிர வகுப்பு மாஜிஸ்டிரேட் மாணிக்கவாசகம் பிள்ளை, முனிசிபல் கவுன்சிலர் ஹம்சம்மாள் அரைக்கண்ணு முதலியார் முதலியோருடன் கொஞ்சநேரம் பேசியிருந்தனர். கூட்டத்தினர் நகரின் பல முக்கியமான இடங்களைப்பார்த்துவிட்டு ஸ்பெஷல் ரயிலுக்கு வந்துவிட்டனர். அவர்கள் நேற்றிரவு சென்னைக்குப் புறப்பட்டனர்கள்.

சென்னை, டிச, 31

இக்கூட்டத்தார் இன்று காலை சென்னைவந்து சேர்ந்தனர்கள். மசோலினியின் குமாரி திருவட்டீசுவரம் [illegible].

சென்னையில் மாயத் திருட்டு

வக்கீல் குமாஸ்தாவின் தந்திரம்.

திருட்டை மறைக்கும் சூழ்ச்சி வெளிப்பட்டது

சென்னை, டிசம்பர், 31.

ராஜுவ காலிஸ் சந்தில் ஆரிக் குமாஸ்தாவான அனந்தகிருஷ்ணய்யர் வீட்டில் சென்ற சனிக்கிழமையன்று நிகழ்ந்த திருட்டு மாயக்காரத்தனமான ஆச்சரியமான பல விவரங்கள் தற்போதுதான் வெளிப்பட்டிருக்கின்றது. சென்ற சனிக்கிழமை மாலை 5 மணிக்கு அவ்வீட்டுக்காரர் தமது மனைவியையும் மற்றவர்களையும் நாடகத்திற்கு அழைத்துச் சென்ற போது வீட்டில் தமது பந்துவான வாலிபன் ஒருவனை வீட்டைக் காவலாகவிட்டுச் சென்றதாகத் தெரிகிறது. பிறகு இரவு 10 மணிக்கு அவர் திரும்பி வந்து பார்க்கையில் கதவு உட்புறமாகத் தாளிட்டிருப்பதையும் பல தடவைகள் தட்டியும் திறக்கப்படாதது கண்டு இடுக்கிட்டு கடைசியில் கதவை பலாத்காரமாய் திறந்து கொண்டு உள்ளே போய்ப் பார்க்கையில் சாமான்களெல்லாம் எங்கும் சிதறிக் கிடப்பதையும், தாம் வீட்டுக்குக் காவலாக விட்டுப்போன இளைஞன் காணாதிருப்பதையும் கண்டு திகைத்து விட்டதாயும் சொல்லப் படுகின்றது.

உடனே அவர்போலீசாரை அழைத்து வருவதற்குப் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினார். அவர் போனபின் அவ்வீட்டிலிருந்த மற்றவர்கள் ஏதோ பெருமூச்சு விடும் சத்தம்கேட்டு உபயோகமற்ற ஒரு அறைக்குள் சென்று பார்க்கும்போது அவ்விளைஞனின் கைகால்கள் கட்டுண்டு வாயில் துணியடைத்து அடைத்துப் போடப்பட்டிருப்பதைக் கண்டனர். அவ்விளைஞன் அவர்களிடம் இருட்டியபின் வீட்டருகில் சில மனிதர்கள் நுழைந்து கத்தியைக் காட்டித் தன்னை பயமுறுத்தி கைகால்களைக் கட்டிப் போட்டு வாயில் துணியை யடைத்து விட்டு நகைப் பெட்டியை உடைத்து ஆபரணங்களைத் திருடிச் சென்றதாகச் சொல்லியதாய்த் தெரிகிறது. அன்றிரவு வெள்ளிப் பாத்திரங்களும் நகைகளுமாகச் சுமார் 1000 ரூபாய்க்குச் சொத்துக்கள் களவு போயிருந்தன.

நேற்று மாலை போலீசார் உளவறிந்து வக்கீல் குமாஸ்தாவான லட்சுமிபதி நாயுடு என்பவர் வீட்டைச் சோதனை போட்டபோது களவு போன சொத்துக்களின் பெரும்பாகத்தைக் கண்டு பிடித்துக் கைப்பற்றியதாயும், வக்கீல் குமாஸ்தா லட்சுமிபதி நாயுடுவும், வீட்டுச் சொந்தக்காரர் காவல் வைத்துச் சென்ற அவர் பந்துவான இளைஞனும் சேர்ந்து திருடியபின் திருட்டைக் கண்டுபிடிக்காமலிருக்கச்செய்வதற்காக சூழ்ச்சிசெய்து இளைஞனின் கைகால்களைக் கட்டிப் போட்டு வாயிலும் துணியையடைத்துவிட்டுப்போனதாயும் சொல்லப்படுகின்றது. போலீசார் அவ்விருவரையும் கைதி செய்து காவலில் வைத்திருக்கின்றனர்.

கல்கத்தாவில் சர். கே. வி. ரெட்டி

அரசப் பிரதிநிதியைக் காணல்.

கல்கத்தா, டிசம், 30

கனம் திரு. சாஸ்திரியாருக்குப் பதில் இந்திய அரசாங்க ஏஜெண்டு ஜெனரலாக தென்னாப்பிரிக்கா செல்லும் சர். கே. வி. ரெட்டி, இங்கு வந்து சேர்ந்தனர். அவர் இன்று அரசப்பிரதிநிதியை பேட்டி கண்டார். அவர் இன்றிரவு பம்பாய் புறப்பட்டுச் சென்றார். அங்கிருந்து ஜனவரி இரண்டாம் தேதி புறப்பட்டுச் செல்வார். அவர் 21ம் தேதி டர்பன் போய் சேருவார். கனம் சாஸ்திரியார் ஜனவரி 28ம் தேதி புறப்பட்டு பிப்ரவரி 18ம் தேதி பம்பாய் வந்து சேருவார்.

இந்திய வியாபாரச் சங்கப் பெடரேசன்

அகில தேச வியாபாரச் சங்கக் கமிட்டி

கல்கத்தா, டிசம், 29

இந்திய வியாபாரச் சங்கப் பெடரேஷன் அநேகம் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது. அது ஜினீவா அகில தேச தொழிலாளர் மகாநாட்டு இந்தியர்களையே இந்தியப் பிரதிநிதிகளாய் நியமிக்க வேண்டுமென்றும், சுதேச பாங்கி ஏற்படுத்துவதைப்பற்றி ஆராய ஓர் கமிட்டி நியமிக்கும்படி அரசாங்கத்தை வேண்டியும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. சர். பி. தக்கூர் தாஸை தலைவராகக் கொண்டும், திரு. டி. பி. கோயிட்டானை உதவித்தலைவராய் கொண்டும் அகில தேசவியாபாரச் சங்கக் கமிட்டியொன்றும் நியமித்துள்ளது.

லிபரல் மகாநாடு.

நேரு அறிக்கைக்கு ஆதரவு

அமிதவாதக் கிளர்ச்சிக்கு அரசாங்கமே பொறுப்பு.

போல்ஷ்விக் மசோதாவிற்கு ஆதரவு.

21 வயது வந்தவர்கட்கெல்லாம் ஓட்டுரிமை கூடாது

அலகாபாத், டிசம், 29

லிபரல் மகாநாட்டுத் தலைவர் சர். சிமன்லால் செதல்வாடும் சர். ஜி. எம். [illegible] பம்பாய் மெயிலில் இங்கு வந்து சேர்ந்தனர். மகாநாட்டுத் தலைவரை வரவேற்புக் கமிட்டிக் காரியதரிசியும் [illegible] தலைமையின் கீழ் சென்று வரவேற்றனர்.

திரு. சி. ஒய். சிந்தாமணி [illegible]

[illegible]

தலைவர் பேருரை

[illegible]

திரு. சிந்தாமணி பேச்சு

[illegible]

குடியேற்ற நாடு அந்தஸ்து

[illegible]

நேரு அறிக்கை

[illegible]

குடியேற்ற நாடு அந்தஸ்து

[illegible]

ஓட்டுரிமை

[illegible]

முழுமாகாணப் பொறுப்பாட்சி

[illegible]

தலைவர் நேர்தல்

[illegible]

தொழிலாளர் காங்கிரஸ் பந்தலைக் கைப்பற்றுதல்.

வழி நெடுக குதிரை போலீஸ் பந்தோபஸ்து

2 மைல் தூரத்திலிருந்து 25,000 பேர் ஊர்வலம்.

ஜனக்கூட்டத்தின் அமைதியைப் பாராட்டல்.

தொழிலாளர் கோரிக்கைகள்.

கல்கத்தா, டிசம், 30

ஹௌரா மைதானத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள காங்கிரஸ் பந்தலுக்கு பல ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் ஊர்வலமாகப் புறப்பட்ட போது அவர்களுடன் குதிரைப் போலீசும், லாரிக்களிலும் போலீஸ் பந்தோ[illegible]

[illegible]

காங்கிரஸ் தலைவர்கள் திகைப்பு

[illegible]

...மென்றும் பண்டிதர்கள் மோதிலாலும் மாளவியாவும் அபிப்பிராயப்பட்டனர். அகில இந்திய ரயில்வே தொழிலாளிகள் சங்கத்து உபதலைவரான திரு. [illegible] அவர்கள் பண்டித மோதிலால் நேருவைச் சந்தித்து தொழிலாளிகளின் நோக்கம் தமக்குத் தெரிந்த[illegible]

[illegible]

தொழிலாளர் சந்திப்பு

[illegible]

தொழிலாளிகளின் கோரிக்கை

[illegible]

[illegible]

காங்கிரஸ் பந்தலில் கூட்டம்

[illegible]

மோதிலால் நேருவின் அழைப்பு

[illegible]

நிறைவேறிய தீர்மானங்கள்.

[illegible]

காலஞ் சென்ற பானகல் அரசர்

புரசை வாக்கம் பொதுக் கூட்டம்.

தலைவர்கள் ஐயகுரைகள்.

சென்னை, டிசம்பர், 31

[illegible]

கல்கத்தா காங்கிரஸ்

சமரசத் தீர்மானத்துக்கு ஆபத்து

வங்காள சுயேச்சை கட்சி எதிர்ப்பு

ஐயங்கார் திண்டாட்டம்

காங்கிரஸ் பந்தலில் குழப்பம்.

கல்கத்தா, டிசம், 29

[illegible]

காங்கிரஸ் பந்தலில் குழப்பம்.

[illegible]

மீண்டும் குழப்பம்.

[illegible]

பிறகு அக்கிராசனர் ... முடிவுரை கூறியபின் தீர்மானம் ... நிறைவேற்றப்பட்டு கூட்டம் கலைந்தது.

பந்து விளையாட்டிலும் பார்ப்பனிய அகம்பாவம்.

[illegible] ... பார்ப்பனிய அகம்பாவம்!

மற்றொருவர் கைதியானார்.

லாகூர், டிசம், 29

[illegible]

சென்னை குதிரைப் பந்தயங்கள்.

முதல் ஸ்பிரிங் மீட்டிங்.

இரண்டாம் நாள்.
செவ்வாய்க்கிழமை 1—1—29.

முதற் பந்தயம் பிற்பகல் 2-மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

"கவர்னர்" கப்.

1.	பிரௌன் பிரெட்	9	8
2.	சாய்டாய்	9	0
3.	கக்கூ	9	0
4.	செட் சாக்கெட்	8	6
5.	வான்ட் வொர்ட்	8	1
6.	விண்ட்ஸ்பியர்	7	13
7.	வான்பே	7	10
8.	செம்பெலஸ்	7	9
9.	மார்வின்	7	8
10.	ராவன்ஸ்ஜட்	7	7
11.	கவர்னர் ஜெனரல்	7	0

"சிலோன்" கப் (1 மைல்)

1.	டிப்தாங்	9	8
2.	லக்விலாட்	8	12
3.	பெக் அந்தோனி	8	11
4.	மெர்ரிலெக்ஸ்	8	10
5.	லைர் அமே	8	9
6.	மிர்ண்டான்ஸ்	8	7
7.	கோல்ட்சென்னி	7	13
8.	வாஹப்பிரசாத்	7	10
9.	மெய்ட் ஆப் அத்லோன்	7	9
10.	கோல்கொண்டா	7	9
11.	லக்னௌ	7	8
12.	பிளோசம் டான்	7	7
13.	இண்டெலிஜென்ட்சர்	7	6
14.	ஜோவியல்	7	3
15.	மிசாம்	7	0

"ஸ்டுவர்ட்ஸ்" கப். (6 பர்லாங்குகள்)

1.	டிப்தாங்	9	0
2.	கவிருலாஸ் பெல்ட்	8	13
3.	டன்ஹோம்ஸ் பெல்ட்	8	4
4.	லக்விலாட்	8	4
5.	மெரிலெக்ஸ்	8	3
6.	ஸ்வோயர்டிரா	7	6

"பஹ்ரெய்ன்" பிளேட். (7 பர்லாங்குகள்)

1.	செட்பிளாக்	9	3
2.	அஜெடின்	8	11
3.	மாருத்பெக்	8	2
4.	வன்னம்	8	1
5.	வாரி	8	1
6.	டிப்பா	8	0
7.	மூஸாஜி	7	12
8.	டிசெனஜா	7	10
9	பாலவி	7	8
10.	செய்க் பீரீட்	7	0
11.	ராம்டி	7	0
12.	ஜெய்னூன் மூன்க்	7	0
13.	தஹாம்டன்	7	0

"கல்லோவே" பிளேட் (6 பர்லாங்குகள்)

1.	துராட்செல்	9	12
2.	மூலன்	9	7
3.	மூன் லைட்	9	6
4.	பாடியார	9	3
5	காரூலஸ்	8	10
6.	ஆரோரா	8	8
7.	ஆலன்ட்	8	6
8.	சதாயுன்	8	6
9.	சிஹாயா	8	5
10.	அக்டோபர்	8	2
11.	மின்க்	8	2
12.	பிளாடினம்	8	1
13.	மாண்டான்	8	1
14.	ஜூபிபெக்	7	11
15.	ஐங்கர்த்	7	7
16.	ஆப்லைட்	7	4
17.	பார்க்டியார்	7	2
18.	செய்லாத்	7	0

"கட்" பிளேட் டிவிஷன் (1) (6 பர்லாங்குகள்)

1.	வன்னம்	9	1
2	செட்லிப்ஸ்	8	10
3.	சைஜு	8	8
4.	பிளாக்லாட்	8	4
5.	கோகோ	8	1
6.	ஜூவிலியன்ஸீஸர்	7	10
7.	வெட்னஸ்டே	7	9
8.	லமர் மாட்	7	7
9.	டாக்	7	1
10.	காலாத்	7	0
11.	மிமோரமண்டா	7	0

"கட்" பிளேட் டிவிஷன் (2) (6 பர்லாங்குகள்)

1.	பாசேஜ்	9	0
2.	ஜூபிபெக்	8	8
3.	சாஜூத் பெக்	8	8
4.	கனிபெக்	8	5
5.	ஜூலஸ்	7	11
6.	மோதலன் ரஹீம்	7	7
7.	சாட்டர்டே	7	6

"கோனிகல்" பிளேட் (7 பர்லாங்குகள்)

1.	[illegible]	9	5
2.	ஜயகுமார்	9	2
3,	ஜயதேவ்	8	6
4.	ஆல்போர்ஸ்	8	5
5.	மண்டோதரி	8	4
6.	ஜோவியாலிட்டி	8	4
7.	லட்டு	8	0
8.	லிலாஜி	7	11
9.	ராயல் அலையன்ஸ்	7	10
10.	பொலெட்பாய்	7	7
11.	சிரியாகல்லோ	7	6
12.	வீவன்டி	7	6
13.	பாதசா	7	0
14,	சுபாலா	7	0

சிங்காரவேலுசர்க்கார் வழக்கு

அப்பீல் மனு ஒப்புக்கொள்ளப்பட்டது.

தண்டனையை நிறுத்திவைக்க உத்தரவு

சென்னை, டிச, 31

சென்ற ஜூலை 21ந் தேதி ... [illegible] ... 6 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டதற்கு விரோதமாக ... சென்னை ஹைகோர்ட்டு பிரதம நீதிபதி முன் அப்பீல் மனு தாக்கல் செய்யப்பட்டபோது பிரதம நீதிபதி அப்பீல் மனுவை ஒப்புக்கொண்டு, அப்பீல் விசாரித்து முடிவாகும்வரை தண்டனையை நிறுத்திவைக்கப்படவேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்தார்.

[illegible] ... 126-வது பிரிவின் கீழ் ... [illegible]

[illegible] ... அப்பீல் விசாரணையை இரு ஜட்ஜுகள் முன் நடத்துவதற்கும் வாயிதா போட்டிருக்கின்றார்.

எதிரிகள் தரப்பில் திரு. ... [illegible] ... ஐயங்காரும் தோன்றியிருந்தனர்.

டெல்லி முஸ்லீம் மகாநாடு.

தலைவர் வருகை.

டெல்லி, டிசம், 30

டெல்லி அகில கட்சி முஸ்லீம் மகாநாட்டுத் தலைவர் மே. த. ஆகாகான் இன்று மாலை இங்கு வந்து சேர்ந்தனர். அவரை வரவேற்பு கமிட்டியார் விமரிசையாக வரவேற்றனர். ஸ்டேசனுக்கு சர் முகமத்சாபி, நவாப் மொஹ்ஸின் ... நவாப் முகமது யூசப், முதலிய பிரமுகர்கள் வந்திருந்தனர். மே. த. ஆகாகான் ... தங்கியிருக்கின்றார்.

பகிஷ்கரிக்கத் தீர்மானம்

கல்கத்தா, டிசம்பர், 29

அகிலஇந்திய முஸ்லீம் சங்க மகாசபை திரு. ... தீர்மானத்தின்பேரில் டெல்லியில் மே. த. ஆகாகானின் தலைமையில் நடைபெறும் மகாநாட்டை பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளது.

ஜெயிக்கக்கூடிய குதிரைகள்

"கவர்பாயன்ட்" என்பவரால் தேர்ந்தெடுக்கப்பட்டது

கவர்னர்ஸ் கப்:—	
செட்சாக்கெட்	1
விண்ஸ்பியர்	2
கக்கூ	3
சிலோன் கப்:—	
லக்னௌ	1
கோல்ட் சென்னி	2
மிரய்ம்	3
ஸ்டுவர்ட்ஸ் பிளேட்:—	
கவி ருலாஸ் பெல்ட்	1
மெர்ரி லெக்ஸ்	2
பாரின் பிளேட்:—	
செட்பிளாக்	1
வாரி	2
அஜெடின்	3
கால்லோவே பிளேட்:—	
பிளாடினம்	1
அபிஸ்கார்த்	2
மின்க்	3
கட் பிளேட், டிவிஷன் 1:—	
வெட்னஸ்டே	1
கோகோ	2
சைஜு	3
கட் பிளேட் டிவிஷன் 2:—	
சாட்டர்டே	1
சாஜூத்பெக்	2
கோனிகல் பிளேட்:—	
மண்டோதரி	1
சிரியாகல்லோ	2
ராயல் அலையன்ஸ்	3